உ
சிவமயம்

gistered as a News paperin Ceylon
P. M. G. NO. H. A 89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருஅ] யாழ்ப்பாணம்— விய ஞூ வைகாசிமீ ககஉ (1946 மே 24 வெள்ளிக்கிழமை) [இல கசு

# சேனநாயகாவின் பதவி வேட்டை

## சோல்பெரித் திட்டத்துக்கு ஆசி!

### சர்வகட்சிகளையும் சேர்த்து ஆட்சி! தானே சர்வாதிகாரம் நடத்தச் சூழ்ச்சி

### எண்ணியபடியே எல்லாம் நடக்குமா?

(நமது அரசியல்நிருபர் எழுதுகிறார்)

சோல்பெரிப் பிரபுவும் அவர் குழுவினரும் வகுத்த அரசியற்றிட்டத்துக்கு மன்னர்பிரான் அங்கீகாரமளித்துவிட்டார். அதனையிட்டு மந்திரி சேனநாயக்கா பரமானந்தத்தில் மூழ்கியிருக்கிறார். இந்த இலங்கையில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு உற்ற பெருந் துணை ஒருவர் உளரேல், அவர் மிஸ்ரர் சேனநாயக்கா என்பது சோல்பெரித் திட்டத்தை அவர் அங்கீகரித்ததிலிருந்து நன்கு விளங்கும். அயலிலேயுள்ள பரதகண்டம் பூரண சுயராச்சிய உரிமை பெற்றுள்ளபோது, அங்குப்போல வகுப்பு வேற்றுமைகளோ, சமயப் பூசல்களோ இல்லாத சின்னஞ்சிறு இலங்கை இன்றும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வாலில் தொங்கி நிற்க மிஸ்ரர் சேனநாயக்காவும் அவர் குழுவினரும் கருமங்களை ஆற்றி வருகின்றனர். புதிய அரசியற்றிட்டத்தின்படி உள்நாட்டு விவகாரங்கள் மாத்திரமே மந்திரிகள் பொறுப்பில் இருக்கும். வெளிநாட்டு விவகாரம், நாணயச் செலாவணி, பாதுகாப்பு என்னும் பிரதான விஷயங்கள் யாவும் பிரிட்டிஷார் வசமேயிருக்கும். உலகெங்கும் சுதந்திரக் கிளர்ச்சி பலமாயுள்ள இக்காலத்தில், சர்வ நாடுகளும் தத்தம் அடிமைத் தளைகளை அறுத்தெறியக் கங்கணம் கட்டிநிற்கும் இச் சந்தர்ப்பத்தில் சேனநாயக்கா, சோல்பெரித் திட்டத்தை ஆலிங்கனஞ்செய்து அதனை வானளாவப் புகழவேண்டியதேன்?

#### பதவி மோகமும் அதிகார ஆசையும்

இலங்கைக்குச் சர்வாதிகாரியாக வேண்டும் என்பதே மிஸ்ரர் சேனநாயக்காவின் பேரவா! தியாகம் செய்து, பெறக்கூடிய பூரண சுதந்திரத்திற்குக் காலம் போகும். எனவே உள்ளதைக்கொண்டு உல்லாச வாழ்க்கை நடாத்த அவாவும் ஒருவருக்கு இத்திட்டம் உவப்பாகாமற் போகுமா? புதிய அரசியற் றிட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்படுமுன்னரே மிஸ்ரர் சேனநாயக்கா பதவி வேட்டைக்கான முயற்சிகளில் ஈடுபட்டுவிட்டார். ஐக்கிய தேசியக் கட்சி என்னும் ஓர் கட்சியைத் தாபித்துத் தானே அதன் தலைவராயும், தனக்குப் பக்க உதவிகளாக கொத்தலாவலை, மொலமூரே, முதலியோரை நாடிப் பெற்றார். முஸ்லிம்களில் மிஸ்ரர் ஜயாவும், தமிழ் மக்களில் ஸ்ரீமான்கள் நடேசனும், மகாதேவாவும் அக்கட்சியில் இழுக்கப்பட்டனர். சிங்கள மகாசபை இக்கட்சியுடன் இணைக்கப்பட்டது மிஸ்ரர் பண்டாரநாயகா புதுக்கட்சியில் அங்கத்துவம் பெற்றார். இலங்கைத் தேசிய காங்கிரசும் சேனநாயகாக் கட்சியுடன் சேருவதற்கான உற்பாதங்கள் தோன்றுகின்றன. இயலுமானவரை எதிர்க் கட்சிகளின்றி, யதேச்சாதிகாரம் செலுத்துவதே மிஸ்ரர் சேனநாயக்காவின் லட்சியம். தம்மை ஆதரிப்போர்க்கு மந்திரிப்பதவிகளும், உபமந்திரிப் பதவிகளும், மேற்சபை(செனேற்) அங்கத்துவ பதவிகளும் வாரிவாரி இறைக்க அவர்க்குச் சந்தர்ப்பம் உண்டு.

#### சுலபத்தில் ஜெயம் கிடைக்காது

ஆனால் மிஸ்ரர் சேனநாயக்கா எண்ணியபடியே எதுவும் நடக்காது. உருளிவெளித் தோட்ட விஷயமாக மிஸ்ரர் சேனநாயக்கா கடைப்பிடித்தவரும் கொள்கை தோட்டத் தொழிலாளர் அனைவரையும் பகையாக்கிவிட்டது. இதனைவிட தொழிலாளர் சங்கங்கள் அவர் நடவடிக்கைகளைக் கண்டிக்கின்றன தேர்தற் காலத்தில் சமதர்மக் கட்சியினர் மிஸ்ரர் சேனநாயக்காவுக்குப் பெருந் தலையிடியை உண்டாக்கப்போகின்றனர். சமதர்மக்கட்சித் தலைவர்களான பீற்றர் கெனமன், டக்ரர் விக்கிரமசிங்க, தகநாயக்கா முதலியோரைச் சிறையில் அடைக்கவும் சேனநாயகாக்கோஷ்டி ஆலோசனை செய்வதாக சமதர்மவாதிகளிடையே வதந்தி உலவிப் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர் முன்னேறும் காலம் இது: தொழிலாளர் தம் உரிமைகளை ஸ்தாபிக்கும் காலம் இது. தொழிலாளர் எழுச்சி உலகெங்கும் விளங்கும்போது மிஸ்ரர் சேனநாயக்கா மாத்திரம் அந்த எழுச்சியின் வேகத்தைத் தடுக்கமுடியாது. தொழிலாளர் சமுதாயம் என்னும் சமுத்திரம் பொங்கிப்பாயும்போது, அதனைத் தடுக்க முயற்சிப்பவர்களே அதில் அமிழ்ந்துபோதலுங் கூடும். அதேபோல, இம்முறை நடக்கப்போகும் தெரிவில் சேனநாயகாக் கோஷ்டி அழிந்து ஒழிந்துவிடாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

---

### பிரிட்டிஷ்-அமரிக்கப் பொருள்கள் பகிஷ்காரம்

பலஸ்தீனத்தில் யூதர்களை அநுமதிக்கும் அறிக்கையைக் கண்டிக்கும் அறிகுறியாக, பிரிட்டிஷ் - அமெரிக்கப் பொருள்களை அராபிய மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்று ஓர் கிளர்ச்சி அராபியாவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

---

## ஐக்கிய சுதந்திர முன்னணி

### சுதந்திரப் போருக்கு வழி

சேனநாயக்காவை நம்பவேண்டாம்

"இலங்கையில் இப்போதுபுகுத்தப் படவிருக்கும் சோல்பெரி அரசியற் றிட்டம் நூதனமானது. அது ஓர் அடிமைத் திட்டம் என்பதே இலங்கை சமதர்மக் கட்சியின் அபிப்பிராயம்." சென்ற வாரம் கொட்டாஞ்சேனை குமார கல்லூரியில் நிகழ்ந்த அகில இலங்கைச் சிவில் தொழிலாளர் சங்கத்து இரண்டாவது மகாநாட்டில் இலங்கைச் சமதர்மக் கட்சிக் காரியதரிசியான மிஸ்ரர் பீற்றர் கெனமன் பேசும்போது மேலே கூறியவாறு தமது அபிப்பிராயத்தை வெளியிட்டு மேலும் கூறியதாவது:

"சோல்பெரி அடிமைத் திட்டத்தை இந்நாட்டிலேயுள்ள பிற்போக்காளர்கள் ஏற்றுக்கொண்டு தொழிலாளர் வர்க்கத்தினரை நசுக்கச் சூழ்ச்சி செய்கின்றனர். நாடு சுதந்திரம்பெற வேண்டும்; அச் சுதந்திரப் போரை மக்கள் நடாத்தவேண்டும்; மிஸ்ரர் சேனநாயக்கா போன்ற பதவி வேட்டுவரை நாம் நம்பியிருக்கவொண்ணாது."

---

## யதேச்சையான கிளர்ச்சி அல்லவாம்

### நேருவுக்குசேனநாயக்கா பதில்

"ஒன்றுமறியேன்" என்கிறார்

இலங்கைவாழ் இந்தியரின் நிலைமை சம்பந்தமாகப் பண்டிதர் ஜவஹர்லால் நேருவிடம் இருந்து கிடைத்த தந்திக்குப் பதிலாக மிஸ்ரர் சேனநாயகா பின்வருந் தந்தியை நேருவுக்கு அனுப்பியுள்ளார்:

"சில இந்தியர்கள் ஓர் கிளர்ச்சியை உண்டு பண்ணுவதை நான் அறிவேன்; அது ஓர் வெளிவேஷம். இந்தியர்கள் விஷயமாக இலங்கையின் கொள்கையிலேனும் அதன் பரிபாலன முறையிலேனும் உண்மையான மாற்றம் ஏற்பட்டிருப்பதையோ, அல்லது மாற்றமுண்டுபண்ண உத்தேசிக்கப்பட்டிருப்பதையோ நான் அறியேன். இப்பொழுது, இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையேயுள்ள நேசபான்மைக்கு இடையூறு விளைவிக்கத்தக்க எந்த நடவடிக்கையையும் தடுப்பதற்குத் தங்கள் செல்வாக்கை உபயோகிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன் சமீபகாலத்தில் இந்தியாவுக்கும் சுதந்திர இலங்கைக்கும் இடையே நடைபெறும் பேச்சு வார்த்தைகளில் இந்த நேசபான்மையே அடிப்படையான விஷயமாக இருக்கும் என்பதைத் தாங்கள் அறிவீர்கள் என்று எண்ணுகிறேன்."

---

# பூரண சுதந்திரமே லட்சியம்

## தமிழர் மகாநாட்டின் அறிக்கை

## சர்வாதிகார ஆட்சியை வளர்க்கும் திட்டம்

### மந்திரிசபை உடனே கலைக்கப்படல் வேண்டும்

சோல்பெரித் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசியல் நிர்மாணத்தைப்பற்றி அகில இலங்கைத் தமிழர் மகாநாட்டு நிர்வாகசபை பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது

"அகில இலங்கைத் தமிழர் மகாநாடும், ஏனைய முன்னேற்ற நோக்கமுடைய ஸ்தாபனங்களும் இந்த அரசியற்றிட்டம் பிற்போக்கானது என்றும், அதில் உள்ள சுயேச்சை என்பன யாவும் வீண் புலுடா என்றும் கருதுகின்றன. நமது அயல்நாடாகிய பரதகண்டம் பூரண சுயராஜ்யத்தை யடையும் நிலையில் இருக்கிறது. மற்றும் தேசங்கள் யாவும் சுதந்திரப் பாதையை நோக்கி வெகுதூரம் முன்னேறிப்போகின்றன. தங்களுடைய பரஸ்பர நன்மைக்காக உலக நாடுகள் ஒன்றோடொன்று சேர்ந்தியங்கும் தன்மையில் உள்ள இக்காலத்தில் இலங்கைக்கு அளிக்கப்பட்ட கீழ்த்தரமான அரசியல் நிர்மாணத்தின் நூதன தன்மை எவர்க்கும் புலப்படுவதாக விருக்கின்றது. அதிகார வர்க்கம் இந்தத்திட்டத்தை வேண்டும் என்றே திணித்துக் குழப்பம் ஏற்படுத்த எத்தனித்திருக்கிறது. பிரிட்டிஷ் அரசியலைப்போல இங்கும் ஓர் அரசியலை நிர்மாணித்து "கண்ட பாவனையிற் கொண்டை முடிப்பது" இந்நாட்டில் சர்வாதிகாரக் கொள்கையை வளர்க்க ஏதுவாகும்.

"தமிழர் மகாநாட்டின் லட்சியம் இலங்கையின் பூரண சுதந்திரமே என்பதை மீண்டும் வற்புறுத்த விரும்புகிறோம். நடக்கப்போகும் பொதுத் தேர்தல்கள் ஒழுங்காக நடக்கவேண்டுமானல், அதிகாரவர்க்கம் தலையிட்டுத் தன் செல்வாக்கைப் பிரயோகித்துத் தேர்தல்களைப் பங்கப்படுத்தாதிருக்க வேண்டுமானல், இப்போதுள்ள மந்திரிமார் தம் பதவிகளை உடனே விட்டு விலகல்வேண்டும்.

"இந்தியர் விஷயமாக இலங்கையரசாங்கம் வேண்டும் என்று பல பட்சபாதகமான செயல்களை ஆற்றி வருகின்றது. இது வலியச் சண்டைக்கிழுக்கும் தன்மையானது. இதுவெகு சீக்கிரத்தில் சுதந்திர மடையப்போகும் இந்தியாவிலிருந்து இதற்குத் தக்க பலாபலன்களைப் பெறச் செய்யும் முயற்சியேயாகும்."

---

#### நீர்வேலி ஸ்ரீவிநாயகர் வாசிகசாலை

ஷை வாசிகசாலை இளைஞர்களால் வைகாசிமாதம் 6-ந் திகதி (19-5-46) ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணியளவில் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரின் குருபூசை மிகவும் விமரிசையாக நடாத்தப்பெற்றது. அத்தருணம் பண்டிதர் திரு செ. துரைசிங்கம் அவர்கள் நாயனாரின் சரித்திரமும் அவர் அருளிச் செய்த தேவாரத்தின் மகிமையைப்பற்றியும் மிகவும் விரிவாகச்சொற்பொழிவு நிகழ்த்தினார். ஈற்றில் தேவாரபாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவெய்திற்று. கடித.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், விய ஞு
வைகாசிமீ ௧௧ வெள்ளிக்கிழமை

## வேதனம் போதாதா?

நாட்டிலேயுள்ள பயிர்கள் நீரின்றி நின்று வாட, மூகிலானது கடலிலே சென்று மழை பெய்வது முண்டு; அதுபோல பல வருடங்களாக நடந்த உலக மகா யுத்தங் காரணமாக ஊரிலுள்ள மக்களனைவரும் வயிரார உண்ணவுணவின்றியும் உடுக்கத் துணியின்றியும் செலவிடப் பணமின்றியும் தீரா வறுமையோடு கூடித் தடுமாறுகின்ற இந்த நேரத்திலே, எங்கள் அரசாங்க உயர்தர உத்தியோகத்தர்களுக்கு இப்பொழுது கொடுக்கும் யுத்தகாலச் செலவோடு சேர்த்துக்கொடுக்கும் உயர்ந்த வேதனம் போதாதென்று இலங்கை மந்திரிசபைப் பிரதிநிதிகள் இன்னமும் அவர்கள் வேதனத்தை உயர்த்திக் கொடுக்க உத்தேசித்து விட்டார்கள்; இனி, அரசாங்கசபைப் பிரதிநிதிகள் யாரென்றால் இலங்கைப் பொது மக்களால் அரசியல்விஷயமாகத் தங்களுக்கு ஆகவேண்டிய நன்மைகளைச்செய்யும்படி இற்றைக்குப் பத்துவருடங்களுக்கு முன் தனித்தனி சம்மதஞ் சொல்லித் தேர்ந்து எடுத்து அப்பதவிக்கு ஏற்றப்பட்ட புண்ணியவான்கள்; இந்தப் பதவியை விட்டு இற்றைக்கு ஐந்து வருடங்களுக்கு முந்தியே இவர்கள் அகன்றுவிட வேண்டியது முறை; இவர்களுடைய அதிர்ஷ்டங்காரணமாகவும் ஊரவர்களுடைய துரதிர்ஷ்டங் காரணமாகவும் இடையிலே உலக யுத்தம் மூண்டு வருடக்கணக்கில்நடைபெற்றமையினால், இவர்கள் இன்னமும் இலங்கையரசாங்கசபையிலே சனப்பிரதிநிதிகளெனச் சொல்லிக்கொண்டு "துடைக்கினும் போகேன்" என்றமுறையில் இருக்கிறார்கள். ஆனாலும் இப்படி இன்னுஞ் சில மாசங்கட்குத்தான் தாங்கள் இருக்க முடியுமென்பதை உணர்ந்து கொண்டார்கள்; இதனாற்றான் இப்பதவியை விட்டுக் கழிவதற்கிடையில் தாங்கள் நன்மையோ தீமையோ,தங்களைப்பிரதிநிதியென்று தேர்ந்தனுப்பிய மக்களுக்குச்செய்துவிட்டுப்போகவேண்டுமென்றெண்ணிப் போலும் சொல்லப்பட்ட இரண்டனுட் பிந்தியதைச் செய்யத் துணிந்தனரென ஊரிலுள்ள ஏழைமக்கள் குறைகூறுகிறார்கள்; இவர்கள் செய்யத் துணிந்த வேதனவுயர்ச்சி இந்தச் சமயத்தில் அடாத கருமமாகு மென்பதற்குப் பல ஏதுக்களுண்டு.

அரசாங்க உத்தியோகத்தரின் வேதனத்தை உயர்த்திக் கொடுக்கும் விஷயமாக இடப்பட்ட புதிய திட்டத்தின்படி, இலங்கை வருவாயில் நூற்றிற்கு எழுபத்தொரு விகிதமான அரசிறை வருவாய் மேற்படி உத்தியோகத்தினரின் வேதனமாகச் செலவழியுமென மதிக்கப்பட்டிருக்கிறது; இப்படி எழுபத்தொரு விகிதம் உத்தியோகத்தர் வேதனமாய்ப் போய்விட்டால், எஞ்சிய இருபத்தொன்பது விகித அரசிறை வருவாயைக் கொண்டுதான் இலங்கை மக்களின் பரிபாலனத்திற்காகிய ஏனைய கருமங்களைச் செய்யவேண்டிநேரும். இப்படியான கூடிய விகிதவேதனத் திட்டம் இந்த இலங்கையைத் தவிர, உலகத்திலே வேறு எந்த நாட்டிலேனும் இன்னமும் இல்லையெனச் சொல்லப்படுகின்றது. இந்த இலங்கையெனிலோ தேங்காயும் உப்புந்தவிர, வாழ்க்கைக்கு இன்றியமையா ஏனைய பொருளெவற்றிற்கும் அந்நிய நாட்டையே எந்தநேரமும் எதிர்பார்த்த வண்ண மிருப்பதாகும்; பத்துவருட காலமாக இந்நாட்டைப் பரிபாலனஞ் செய்துவரும் இந்த அரசாங்கசபையார் இலங்கை மக்கள் தங்களைத் தாங்களே தாபரிக்கக்கூடிய நிலைமையில் இற்றைவரையில் வைத்திலர்; வைத்தற்கு முயற்சிசெய்துமிலர்; இந்த இலங்கையைத் தவிர வேறெந்த நாடாயினும் இக்காலத்திலே கைத்தொழில் விவசாயத்தொழில் வியாபாரத் தொழில் என்னுமிவைகள் சீர்கெட்ட நிலையி லிருக்கின்றதோ என்பது நாம் அறியாததாகும், நாட்டிலே போதிய வருவாயை ஆக்க வகையறியாத இந்த மந்திரிசபையார் பரிபாலனச் செலவில் உத்தியோகத்தர்வேதனத்தை மாத்திரம் உயர்த்திக் கொடுக்க முற்பட்டு நிற்பது முறையாகுமா?

இந்த மந்திரி சபையார் வருமானவரியென்று நவமாக ஒருவரியை ஊரவர்கள்மேல் விதித்து மாசம் 200ரூபா வருவாயுள்ளவர்களும் அந்த வருமான வரியை இறுத்தேதீரவேண்டுமென்றுதிட்டஞ்செய்துவிட்டார்கள் மாசம் 200 ரூபா வருவாயுள்ள மனுஷன் இந்தப் பஞ்சகாலத்தில் அந்த 200ரூபாவைக்கொண்டு தன் குடும்பத்தினரையும், தன் பாதுகாப்பிலேயே தங்கியிருக்கும் உற்றார் உறவினரையும் போஷிக்க முடியாது இடர்ப்படுகின்றான்; இப்படிஇவன் இடர்ப்பட்டாலும் இவன் வருமானவரி இறுத்தே தீரவேண்டும்; உத்தியோகத்தர்களுக்குச் சம்பளம் உயர்த்த நேர்ந்தால், அரசாங்க சபையார் அரசிறை வருவாயை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு, மாசம் 100 ரூபா வருவாயுள்ளவர்கள் தலையிலும் வருமானவரியை விதிக்கத் தலைப்படுவரென்று ஊரிலுள்ள ஏழை மக்கள் ஏங்குகின்றனர்; மேலும் தங்கள் பதவியை விட்டு விரைவிலே நீங்கப்போகிற இந்த மந்திரி சபையார் தங்கள் அந்தியகாலத்தில் இப்படியான வருவாய்க்கு மேற்பட்ட செலவை ஆக்கிவிட்டுப்போனால், இனிமேல்வரவிருக்கும் இலங்கைப் புதிய பாராளுமன்றத்தார்செய்யவிருக்கும் பரிபாலனத்திற்கு இவர்கள் இடையூறு தேடி விட்டவர்களாய் முடிவாரன்றோ! எதனையும் முந்தியே யோசித்துச் செய்வது நன்றாம்.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர் —100)

### "மூத்தோர் சொன்ன வார்த்தை அமுதம்"

என் தகப்பனாருக்குத் தாயார் அந்த ஆண்டி படித்த பாட்டு விஷயமாக புறத்தே சமாதானஞ் சொல்லி அவரைத் தேற்ற முயன்றாரெனினும், அகத்தே என் அன்னையார் தாமும் அதையிட்டுக் கவலைப்படக் காணப்பட்டார்; அதனால் என்ன அநர்த்தம் வருமோ என்று என் அன்னையார் இடையிடையே எண்ணியெண்ணி ஏங்குவதை அவதானித்த நான் ஒருநாள் அவரை நோக்கி, அம்மா, ஏன் கவலைப்படுகிறீர்கள்? அந்த ஆண்டி படித்த பாட்டும் ஒரு தேவாரந்தானே, தேவாரம் மங்கலமானதென் றல்லவா சொல்லுவார்கள்; அப்படியெல்லா மிருக்க நீங்களேன் இதையிட்டுக் கவலைப்படுகிறீர்கள் என்று பரிவுடன் கேட்டேன்; "மகளே, தேவாரம் மங்கலமானதுதான், பெரியோர் பாடியது; பெருமானுடைய பெருமைகளை யெல்லாம் தோத்திர வடிவமாய் எடுத்துச் சொல்வது; படிப்பார் கேட்பாருள்ளத்தைப் பரிசுத்தமாக்குவது; மங்கலமான கருமங்களில் எங்கும் ஓதப்படுவது: எல்லாராலும் பாராட்டப்படுவது; ஆனால் அந்தக் குறித்த தேவாரத்தை எங்கள் வீட்டிற்கு வந்த ஆண்டி அன்று படித்தமை அவன் குற்றமல்ல, எங்களுக்கு ஏதோ கேடு வரப்போகிற தென்பதற்கு உற்பாதமாகவே, வேறு தேவாரங்களிருக்க அந்தத் தேவாரம் அன்று அவன் வாயில் வந்தது; அப்படியான தேவாரத்தை யொருவன் காரணமில்லாமற் படித்தாற் படிக்கப்பட்ட இடத்திலே விரைவிற் கேடு வருமென்று பெரியோர் தம் அநுபவத்தைக் கொண்டு சொன்னதை, உன் அப்பர் மாத்திரமல்ல நானுங் கேட்டிருக்கிறேன்; பெரியோர் கொள்கையை நாம் தள்ளிவிட வொண்ணாது; மூத்தோர்சொன்ன வார்த்தையமுதம் என்பர் என்று எனக்குச் சமாதானஞ் சொல்லிக் கவலைப்பட்டார் என் தாயார்; "அம்மா கவலைப்பட்டு ஆவதென்ன, எது நேர வேண்டுமோ அது நேர்ந்துதானே தீரும் என்று என் அன்னைக்கு நான் ஆறுதல் சொன்னேன். என் பெற்றார் கொள்கையில் எனக்கு அதிக நம்பிக்கை அந்த நேரத்தில் இல்லாமையால் நான் அதையிட்டு அதிக கவலைப்படவில்லை.

### எழுதாவிதிக்கு அழுதாவதென்ன?

இது நிகழ்ந்து ஆறுமாச காலஞ் சென்றும் எவ்வகையான இடையூறுமின்றி நாங்கள் பயபத்தியோடு தெய்வத்தை வழுத்தி வாழ்ந்தோம்; இப்படியாக ஏழாமாசத் தொடக்கத்தில், ஐயோ! உங்களுக்கு என்னவென்று எடுத்துச் சொல்லுவேன், என் தகப்பனார் பேதிநோய் கண்டு மூன்றுநாள் எங்களைத் தியங்கவிட்டுப் பரலோகப் பிராப்தியானார்; நானும் என் தாயாரும் அவருடைய பிரிவாற்றாது துடித்துக் கதற, அதிகாரிகள் எங்களை அழவொட்டாது தடுத்துப் பிரேதத்தைக் கொண்டுபோய் அடக்கஞ் செய்து எங்களையும் தனிமையாக இருத்திவிட்டார்கள்; அன்றுதொடக்கம் என்னைப் பெற்றவள் அன்னாகாரம் உட்கொள்ளாது கண்ணீருங் கம்பலையுமாகக் காணப்பட்டாள்; என் அன்னை என்னைப் பார்ப்பதும் அழுவதும் மார்பிற் கைகளால் மோதுவதும் கதறுவதுமாக விருக்கக் கண்டநானும் அழுது கவலைப்பட்டு, உணவை வெறுத்தேன்; அதனை அவதானித்த என் தாய் என்னை அன்புடன் பார்த்து, "கொடுத்துவைக்காப் பாவி வயிற்றிற் பிறந்த என் அருமை மகளே, நான் வயசுவந்தவள், அனுபவப்பட்டவள்; உன் அப்பரை ஒருகணமும் பிரிந்தறியாதவள்; என் குலமுதல் போய் விட்டதென்று கிடந்து புலம்புகிறேன்; ஆனால், நீயோ ஒன்றுமறியாச் சிறுபிள்ளை, நீயும் உப்படி உண்ணாமல், உறங்காமல், எந்த நேரமும் அழுதுகொண் டிருந்தால் ஆவதென்ன? நீ வாழும் பிள்ளை, வளரும் பிள்ளையல்லவா, பிள்ளைக் கலிதீர்க்க வந்த எங்கள் குலக்கொழுந்தே, நீ அழவேண்டாமடியம்மா, பட்டினி கிடக்கவேண்டாமடியம்மா, உங்கள் அப்பர், என் புண்ணியவான் எங்களைப் பரிதவிக்க விட்டுப்போனாலும் எங்களை வெறுங் கையோடு விட்டுப்போகவில்லையடிகண்ணே; என்று முதல் தன்னைத் தேற்றிப் பின் என் கண்ணீரைத் தன் முன்றானையால் துடைத்து உச்சிமோந்து எனக்குத் தேறுதல் சொன்னார்; "அம்மா, அப்பரும் எங்களைக் கைவிட்டுப் போயினர்; நீங்கள்தான் ஆறுதலென்று நம்பியிருக்கிறேன்; ஆனால், நீங்களும் அல்லும்பகலும் அப்பரை நினைந்து அழுத கண்ணுஞ் சிந்திய மூக்கும் விரித்த கூந்தலுமாயிருந்து அவலப்பட்டால், எனக்கு ஆர் தேறுதல் சொல்வது; பெற்றவளாகிய நீங்கள் உப்படிக் கிடந்து அன்னாகாரமின்றி உறக்கமின்றித் துயரப்பட, எனக்கு உண்ணவும் மனம் எழுமா? எழுதா விதிக்கு அழுதாவதென்ன அம்மா; எல்லாம் ஆண்டவன் செயல்; எவையுமறிந்த உங்களுக்கு நான் என்ன சொல்வதென்று என்னைப் பெற்றவளை நான் ஒருவாறு தேறச்செய்தேன்; நான் சொன்னவைகளைக் கொண்டு என் தாயார் அப்பொழுது ஒரு அளவிற்குத்தேறினாரென நான் நினைத்தது பிழை; நான் கவலைப்படுகிறேன், உண்ணாமல் உறங்காமலிருக்கிறேனென்றெண்ணி என் அருமைத் தாயார் என்பொருட்டுத்தான் தேறுதலடைந்தவர்போல் எனக்கும் உணவூட்டி என்னையும் உறங்கச் செய்து தானும் உணவருந்தினார்; உறங்கினாரோ என்பதை நான் அறியேன்; எங்கள் தகப்பனார் மோசம் போன நாள் தொடக்கம் நாங்கள் அடுக்களையில் நெருப்பு மூட்டவேயில்லை; சிற்றப்பாவும் சிறிய தாயாருமே எங்களுக்காகிய சகல கருமங்களையும் அநுதாபத்துடன்நடத்திவந்தனர்; தாயாரோடு என் தங்கையுமே எனக்குப் பெரிய ஆறுதல் தநதுவந்தார்கள். "வாழ்வாவது மாயம்......" என்று ஆண்டி படித்த பாட்டை இடையிடையே என் தாயார் படித்துக் கவலைப்பட நான் கேட்டேன.

### "உங்களுக்கு முந்தி என்னுயிர் மாய்ப்பேன்"

இங்ஙனமாகச் சிலநாட்களாக ஒருவாறு மனமாறியிருந்த என் தாயார் பழையபடி கண்ணீருங் கம்பலையுமாக விருப்பதை அவதானித்த நான் அன்னையை அனுதாபத்துடன் பார்த்து "அம்மா, பின்னும் பின்னும் நீங்கள் கவலைப்படத் தொடங்கி என்னையும் தீராக்கவலைக்கு ஆளாக்குகிறீர்கள்; நான் உங்களுக்குச் செய்த குற்றம் என்ன அம்மா; எனக்கு மறைத்துத் தனியிடத்திற் போயிருந்து அழுகிறீர்கள்; சில சமயங்களில் என்னை உண்ண உறங்கச்செய்துவிட்டு, நீங்கள் உண்ணாமல் உறங்காமற் கவலைக்கடலில் மூழ்கிக் கிடக்கிறீர்கள்; இனி என்னைக் குறைகூறுகிறீர்கள்; நீங்கள் இப்படிச் செய்தால் நானும் உண்ணாமல் உறங்காமற் கிடந்து உயிர் விடுவேன், இது பரிகாசமல்ல, நிசமென நம்புங்கள் என்று விம்மி யழுது சொன்னேன்;

தொடர்ச்சி 5 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ சேர். பொன். இராமநாதன்

## அவர்கள் KC; CMG

பெருங் கருணைக் கடற்கடலாகிய சிவபெருமானின் திருவருளாற் சைவ சமயத்தைப் பரிபாலனஞ் செய்யும் பொருட்டுக் காலந்தோறும் பல பெரியார்கள் தோன்றிச் சைவசமயத்தை வளர்த்து வருகின்றனர். அங்ஙனந் தோன்றியவருள், அண்மைக் காலத்திற்றோன்றி மெய்நெறி வளர்த்தவர் சேர் பொன். இராமநாதன் அவர்களே. இப் பெரியாரின் வருகையாற் பொதுவாக இலங்கையர் யாவரும் அரசியற் றுறையிற் பெருமை யடைந்தனர். சிறப்பாக இலங்கைத் தமிழரடைந்த நலங்களோ எண்ணிலடங்குவனவல்ல. அவற்றுள் சைவசமய மக்கள் தத்தம் சமயநெறியொழுகப் பல துறைகளை யமைத்து வைத்தவை தலைசிறந்தன. கொழும்புமாநகரில் இப்பெரியாரால பரிபாலிக்கப்பட்டு வந்து, இன்னும் நின்று யாவருக்கும் வெளிச்சங் கொடுக்குஞ் சிவாலயம் சைவ விதிப்படி முறையில் எவ்வளவு பெருந்தொண்டு செய்கின்றதென்பதைக் கண்ணுற்றோர் யாவரும் புகழ்ந்து கூறுவர். இப் பெருந்தகை புரிந்த நன்மைகளுட் சிகரமாக இலங்குவது, நம் பெண் குழந்தைகள் கிறிஸ்தவ மத பாடசாலைகளுக்குக் கற்கப் போய்த் தஞ் சமய நெறியிழந்து கிறிஸ்துமத வலைப்பட்டும், சைவசமயப் பற்றற்றும், தமிழாசாரம் வழுவியும் அவஞ்செறலடைவதைக் கண்டு, சகியாது மனமுருகி எவ்வித வசதியும் செவ்விதிற்றிகழ, சுன்னாகத்தில் தஞ்செலவில் அமைத்து வைத்த கல்லூரியே! அக்கல்லூரி இப்பொழுதும் செய்து வரும் சைவத் தொண்டு செப்புந் தரத்ததன்று. எதிர்காலத்தில் இக்கல்லூரி நித்திய தீபம்போல விளங்கி நாற்றிசையிலும் சைவ ஒளியைப் பரப்புமென்பதற் கையமின்று.

இது மாத்திரமா? இற்றைக்கு முப்பதாண்டுகட்கு முன்னர் சைவ சமய பரிபாலனமுறையிற் சைவவாலிபர் விழித்தெழுந்து ஊர்கடோறும் சைவ வாலிபர் சங்கங்களை அமைத்துத் தொண்டாற்றி வருங்காலத்துக் கீரிமலையில் இப்பெரியார் தலைமையில் சைவ வாலிபர் சங்கத்தின் வருடாந்தக்கூட்டம் நடந்தது. அப்பொழுது காரியதரிசியாயிருந்த வழக்கறிஞர் திரு. மா. ச. இளையதம்பி அவர்கள் தமது அறிக்கையை வாசித்துப் பின்னாற் காணும்படி பிரகாரம் பிரேரபித்தனர். Sir, you have established a college for girls, what about boys sir உடனே அப்பெரியாரவர்கள், "ஆம், ஆண்களுக்கும் ஒரு கல்லூரியை நிறுவி வைப்பேன்" என்பதாகச் சொல்லிய அமுதமொழியின் ஓசை இன்றும் எம் செவியில் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றது. இவர்கள் தம் வாக்கின் பிரகாரம் யாழ்ப்பாணத்துள்ளாரெவரும் பார்த்து நிற்கும் தெய்வத்தகைத்தாகப் பரமேசுவரன் திருவருளாற் பரமேஸ்வரக் கல்லூரியென்னும் பெயரோடு ஒரு சிறந்த கல்லூரியைத் திருநெல்வேலியென்னுமிடத்தி லமைத்து வைத்தனர். இக்கல்லூரியின் வெள்ளிவிழா இத்தமாதம் 14-ந் தேதி தொடங்கி நடைபெற்று வருகின்றது. இக் கல்லூரியின் நிருவாகம் பெரியாரின்பின் இவர்களின் மருகரும அறிஞருமான திரு. சு. நடேசபிள்ளை அவர்களின் தலைமையிற் சிறப்பாக நடைபெற்று வருவதைக் கண்டு மகிழ்கின்றோம்.

தற்கால ஆங்கிலக் கல்வி, மாணவர்களை லௌகிகத் துறையிற் கொண்டு செல்கின்றதெனப் பல பெரியார் அபிப்பிராயங் கொண்டுள்ளனர். இவ்வபிப்பிராயத்துக் கிடங்கொடாது "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்" என்னுந் திருவள்ளுவர் வாக்கைச் சிரமேற் கொண்டு, மாணவர் தெய்வ வழிபாட்டிலும் சமயவறிவிலும் சிறக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இரண்டு கல்லூரிகளிலும் ஆலயங்களை அமைத்தார். மாணவர் தவறாது ஆலயஞ் சென்று சுவாமி தரிசனஞ் செய்து நாடொறும் பெற்றுக் கல்வி கற்பதற்கும் வசதி செய்துள்ளனர்.

இன்னும் சைவசமயம் தமிழ்மொழி இவைகளின் விருத்தியின்பொருட்டுப் பாடசாலைகளைத் தாபித்தும் நூல்களை இயற்றியும் பல ஊர்களுக்குஞ் சென்று பிரசங்கமாரி பொழிந்தும் இங்ஙனம் பிறநஞ் செய்யமாறு ஊக்கியும் பற்பல வழிகளிற் றொண்டியற்றி வந்தனர் இப்பெரியாரது சமயப்பற்றின் உரத்தைக் காட்டும் ஓர் சம்பவம் இன்றும் எம் மனத்தைவிட்டகன்றிலது. இருபது வருடங்கட்கு முன் எம் காரைநகர்ச் சைவ மகா சபையின் பத்தாம் வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமைவகிக்கக் கேட்ட போது, வயோதிக நிலையையும், வழி நெடுமையையும் நோக்காது சிவகிம்சம் மாத்திரமே தருவேனென்று சொல்லி வந்தவர், தம்மை மறந்து மூன்றுமணிக்கு அதிகமாகத் தங்கள் தங் கருத்துக்களையெல்லாம் அமுதமயமாக மொழிந்து சென்ற நிகழ்ச்சி எம் மனத்தைவிட்டு என்று மாறுமோ?

இங்ஙனம் தம் ஆயுட்காலம் முழுவதும் திரிகரணங்களாலும் தமிழுக்கும் சைவசமயத்துக்கும் தொண்டாற்றி "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்னும் நாயனார் வாக்கிற் கிலக்கியமாகச் சென்ற நம் இராமநாதப் பெரியாரை மறவாமல் மனத்திலிருத்தி வைத்திருக்கின்றோமென்பதற்கு அடையாளமாக நாம் ஒன்றும் செய்யவேண்டாமா? மறந்தால் செய்நன்றி கொன்ற உய்தியில் குற்றம் நம்மைச் சூழாதா? 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச் செய்நன்றி கொன்ற மகற்கு" என்பது பொய்யாமொழியன்றோ? இதற்குப் பரிகாரமாக என் மனதில் ஓர் அவா தோன்றுகிறது. பரமேஸ்வரக் கல்லூரி வெள்ளிவிழாக் கொண்டாட்ட காலத்தில் அவ்வாவை வெளியிடல் மிகப் பொருத்தமென்றெண்ணி அதனை வெளியிடுகிறேன்:—

இராமநாதப் பெரியாரவர்களுக்குப் பரமேஸ்வரக் கல்லூரியை யாழ்ப்பாணத்துக்குரிய சர்வகலாசாலையாக்க வேண்டுமென்பதாகிய அவா இருந்தது. இலவசக்கல்வி எங்கும் பரந்து அரசியலிலும் திருத்தம் ஏற்பட்ட இக்காலத்தில் அரசாங்க அங்கத்தவராவதற்கு ஆடி ஓடித் திரிபவர்களும் தமிழர்தலைவர் தாமே என்றிருப்பவரும், மற்றைய அறிஞர்கள் முதலாயினோரும் ஒன்றுசேர்ந்து முயன்றால் இது நிறைவேறாதா? ஏற்ற முயற்சி செய்யின் எதுவும் நிறைவேறும்.

இன்னுமொன்று ஆவசியமானது. கொழும்புமாநகரிற் சென்று எங்கெங்கே நோக்கினும் யாழ்ப்பாணத் தமிழரைக் காணலாம். ஆயின் சகல வசதியோடும், சைவநெறிக்குத் தடையின்றித் தங்கித் தகுந்த இடமொன்று காண்டலரிது. எத்தனை மாணவர், சைவப் பெரியார் இங்கே வந்து பல முறை கஷ்டமடைந்துள்ளனர். ஒவ்வொரு சமய, சாதி மக்களும் தாம குழுமியிருக்குமிடங்களிற் றம் சமயத்தினர் எவர் விருந்தினராய் வரினும் அவர் வசதியாய்த் தங்குவதற்கேற்ற தங்குமிட மமைத்திருத்தலை உலகெங்குங் காணலாம். கொழும்பு மாநகரில் சைவமக்கள் பொருட்டு ஒரு தங்குமிடமில்லாமையை எங்ஙனஞ் சொல்[illegible] சைவப் [illegible]

ளே! இன்றே எழுங்கள்! ஏற்ற பொருள் திரட்டி ஒரு சைவாச்சிரமம் காணுங்கள். இராமநாதப் பெருந்தகையின் பெயரால் இஃது ஏற்படுவது சிறந்தது. இங்ஙனம் எனது வேண்டுகோளை யாவருக்குஞ் சமர்ப்பிக்கின்றேன்.

"அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி
விட்டு விட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும்
பராபரமே"—தாயுமானவர்.

இ, நாகலிங்கம்
அக்கிராசனர்.

[illegible]சபை,
[illegible]ர், 20-5-46

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

(சி. அருளம்பலம், விவேகானந்தசபை, அநுராதபுரம்)

திருச்சிற்றம்பலம்.

'வேதநெறி தழைத்தோங்க
மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலிய
புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித்
திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம்."

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் தலைசிறந்தவரும் நம் சமய குரவருமாகிய திருஞானசம்பந்த சுவாமிகள், பிரமபுரம், வேணுபுரம் முதலாகிய பன்னிரு திருநாமங்களைப் பெற்றுள்ளதும் சோழ மண்டலத்துள்ளதுமாகிய சீகாழிப் பதியிலே பிராமண குலத்திலே, நம் சைவசமயம் தழைத்தோங்கவும் தமிழ்மொழி சிறக்கவும் திருவவதாரம் செய்தருளினர். இவருடைய தந்தையார் பெயர் சிவபாதவிருதயர். தாயார் பெயர் பகவதியார், பிள்ளையாருக்கு மூன்று வயதாயிருக்கும்போது ஒருநாள் தந்தையாரோடு தோணியப்பர் கோயிலுக்குச் சென்றார். இவருக்கு இரண்டாண்டு கிரம்பி மூவாண்டு தொடங்கிய பருவத்தை நம் சேக்கிழார் சுவாமிகள்,

"மங்கைசோ ருடனாகி
வளர்தோணி வீற்றிருந்த
திங்கள்சேர் சடையார்தந்
திருவருட்குச் செய்தவத்தி
னங்குரம்போல் வளர்ந்தருளி
யருமறைசோ டுலகுய்ய
எங்கள்பிரா னிரண்டின்
மேலோராண் டெய்துதலும்"

என்று அழகாக திருவருட் செய்தவத்தின் முளையாக வர்ணிக்கின்றார். தந்தையார் ஒருநாள் நீராடச்சென்று இவரைத் தோணியப்பர் கோயிற் குளக்கரையில் விட்டுவிட்டுக் குளத்தில் இறங்கி நீருள் மூழ்கி நீராடினார். நீருள் மூழ்கி மறைவதாற் றந்தையாரைக் காணாது நிலைகொண்டு தோணியப்பர்கோயிற் சிகரத்தைப் பார்த்து, அம்மே! அப்பா! என்று அழுதார். உடனே, சிவபெருமான் மனங்குழைந்து ஞானப்பாலை ஊட்டுமாறு உமாதேவியாருக்குக் கட்டளையிட அவர் வெளிப்பட்டுத் தமது சிவஞானமாகிய பாலைக் கறந்து பொற்கிண்ணத்தேந்தி யூட்டியருளினர். அன்று பிள்ளையாரின் அழுகையும் தீர்ந்தது. நீராடித் தமது நித்திய அனுஷ்டானங்களையெல்லாம் முடித்துக்கொண்டு வந்த தந்தையார் இவர் வாயிற பாலொழுகுவதைக் கண்டு, நிகழ்ந்ததைக் கூறும்படி கேட்டார். உடனே பிள்ளையார் சிவபெருமானுடைய திருச்செவியைச் சிறப்பித்துத் தொடங்கி அவர் பெருமைகளைக் கூறும் 'தோடுடைய செவியன்' என்பது முதலாகிய தேவாரங்களைப் பாடி அதுபொழுது அங்கே தோன்றியருளிய சிவபெருமானைச் சுட்டிக்காட்டியருளினர். சிவபாத விருதயர் மகிழ்ந்து தோணியப்பர் கோயிலுக்குச் சென்று வணங்கி மீண்டார். சிவபெருமானால் ஆட்கொள்ளப் பட்டமையால் ஆளுடைய பிள்ளையார் என்னும் பெயரைப்பெற்ற இவர் சிவஞானத்தையும் பெற்றமையால், திருஞான சம்பந்தரென அழைக்கப்பட்டனர்.

'யாவருக்குந் தந்தைதா
யெனுமிவரிப் படியளித்தார்
ஆவதனால் ஆளுடைய
பிள்ளையா ராயகில
தேவருக்கும் முனிவருக்குந்
தெரிவரிய பொருளாகுந்
தாவில்தனிச் சிவஞான
சம்பந்த ராயினார்"

என்று சேக்கிழார் சுவாமிகளும் வர்ணிக்கின்றார்.

இவரது பெருமையைக் கேள்வியுற்ற, நாவுக்கரசர், திருநீலகண்டப் பெரும்பாணர் முதலிய சிவனடியார்கள் சீகாழிக்கு வந்துசேர்ந்தனர். பெரும்பாணர் பிள்ளையார் பாடும்போது அத் திருப்பதிகங்களையெல்லாம் வீணையில் வாசித்துக்கொண்டு பிள்ளையாரோடு இருந்தார். பின்பு பிள்ளையார் சிதம்பரத்தை யடைந்து அங்கே தில்லைவாழந்தணரைச் சிறப்பித்துப் பாடினர், பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு அப்பாற்சென்று திருநெல்வாயிலரத்துறையில் சிவபெருமானாற் கொடுக்கப்பட்ட முத்துப்பல்லக்கையும் முத்துக் குடையையும் பெற்றார்.

"நிசதிலப்படு பந்தருஞ்
சிவிகையும் நெற்யே
முத்தமிழ்க்கொரு தலைவனும்
மதலைக்கு முதல்வ
னுய்த்த வாறென"

என்று கந்தபுராணத்தும் கூறப்பட்டிருத்தல் காண்க.

திருப்பாலாச்சிரமம்சென்று கொல்லிமழவன் மகளின் முயலகன் நோயைத் தீர்த்தருளினர். திருச்செங்கோட்டிற்குச் சென்று பனிப்பிணியை நீக்கினர். மற்றும் பல தலங்களுக்கும் சென்று, திருநீலநக்கர், சிறுத்தொண்டர் முதலியவர்களையும் சிறப்பித்துப் பாடியுள்ளார். சிலநாளின் பின் திருமருகலுக்குச்சென்று பாம்பு கடித்திறந்த வணிகனை விஷம்போக்கி உயிர்ப்பித்தார்,

திருப்புகலூரைக் கடந்து சென்று அப்பர் சுவாமிகளைச் சந்தித்துத் திருவீழிமிழலையை அடைந்து பொற்காசு பெற்றனர்,

சில தினங்களின்பின், பல தலங்களையும் வணங்கிச்சென்று வேதாரணியத்தை யடைந்தனர். அங்கு பாண்டியன் மனைவியாகிய மங்கையர்க்கரசியாரும், முதன் மந்திரியாராகிய குலச்சிறை நாயனாரும் அனுப்பிய தூதுவர்கள்மூலம் சைவசமயக் குறைவுகளையும், சமணர்களின ஆதிக்கத்தையும் கேள்விப்பட்டு அங்குச் சென்று சமணர்கள் செய்த கொடுஞ் சூழ்ச்சிகள் ஒன்றற்கும் அஞ்சாது, தாம இருந்த மடத்திற்கு அவர்களிட்ட தீயை அப்படியே பாண்டியனை வயிற்றில் வெப்பு நோயாய்ப் பற்றும்படி செய்து தாமே பின்னர் அதனைத் தீர்த்துச் சைவ சமயத்தை விளக்கி நிலைநாட்டினர். இதனைத் தீர்த்தற்காகவே திருநீற்றுப் பதிகம் பாடினர். பின்னர் சமணர்களோடு பல வாதங்கள் புரிந்து சைவசமயத்தையும் தமிழையும் சிறக்க வைத்தனர்.

பின் புத்தரோடு வாதஞ் செய்து அவர்களை வாயடக்கி வென்று சைவத்தை நிலைநாட்டினர். தொண்டைமண்டலத் திருவோத்தூரை யடைந்து ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கினர். அப்பால் திருவாலங்காடு திருக்காளத்தி முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவொற்றியூரில் வந்து

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சிற்றம்பல யமக வந்தாதி

திருவாவடுதுறை ஆதீன வித்துவான்
(யாழ்ப்பாணம்) ஸ்ரீலஸ்ரீ சபாபதி நாவலர் இயற்றியது
சென்னை தமிழ்ப்பண்டிதர் கொ. இராமலிங்கத்தம்பிரான் எழுதியஉரையுடன்:
திருமயிலை திரு. சே. வெ. ஜம்புலிங்கப்பிள்ளை அவர்கள் உதவியது

## சிறப்புப்பாயிரம்

சீரார்தென் னீழ வடகோவை யான்சிவன் சேவடிக்கீழ்
நாரார் சுயம்புமன் பெற்ற சபாபதி நல்லறிஞன்
ஏரார்சிற் றம்பல வந்தாதி மாலை யிசைத் தணிந்தான்
காரார்பொ ழிற்புலி யூர்மன்ற வாணன் கழலிணைக்கே.

(பதவுரை) சீர் ஆர்-சிறப்புப்பொருந்திய, தென் ஈழ வடகோவையான்-தெற்குத் திசையிலுள்ள யாழ்ப்பாணத்தின் வடகோவை நகரத்திலுள்ளவனாகிய, சிவன் சேவடிக்கீழ்-சிவபெருமானது திருவடியினிடத்தில், நார் ஆர்-அன்புவாய்ந்த, சுயம்புமன்-சுயம்புப்புலவர், பெற்ற-பெற்ற சபாபதிநல்லறிஞன்-நல்ல அறிவாளியாகிய சபாபதிநாவலன், கார் ஆர்-மேகங்கள் தவழ்கின்ற பொழில்-சோலைசூழ்ந்த, புலியூர் மன்றவாணன்-புலியூரின் கண் எழுந்தருளிய பொன்னம்பலவாணனது, கழல் இணைக்கு-இரண்டு திருவடியினிடத்து ஏர் ஆர்-அழகு பொருந்திய, சிற்றம்பல அந்தாதி மாலை-சிற்றம்பல அந்தாதியென்னும் மாலையை, இசைத்து-புனைந்து, அணிந்தான்-சூட்டினான்; (எ-று.)

### காப்பு

தற்பகத் தாரறி யாதசிற் றம்பரச் சங்கரற்கிப்
பொற்பகத் தாற்புனை யந்தாதி மாலைக் கருள்சுரக்க
வெற்பகத் தான்விளை யாட்டயர் வேலற்கு மூத்ததிருக்
கற்பகத் தாண்மலர் சென்னியிற் கொண்டு கருதுவனே.

(பதவுரை) தற்பு அகத்தார்-உகந்தை பொருந்திய மனத்தையுடையோர், அறியாத-அறியமுடியாத, சிற்றம்பலம் சங்கரற்கு-திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளிய சிவபெருமானுக்கு, யான்-அடியேன், அன்பு அகத்தால்-அன்பு பொருந்திய மனத்தால், புனை அந்தாதி மாலைக்கு-புனைந்த அந்தாதிப் பிரபந்தமாகிய மாலைக்கு, அருள்சுரக்க-கருணை அதிகரிக்கும்படி, வெற்பகத்தான்-மலைகளிடங்களிலேதோறும் விளையாட்டயர்-விளையாட்டினைச் செய்கின்ற, வேலற்கு-முருகக் கடவுளுக்கு, மூத்த-மூத்தவராகிய, திரு கற்பகத்தாள் மலர்-அழகிய கற்பக விநாயகரது திருவடித் தாமரைகளை, சென்னியிற்கொண்டு-சிரசிற்கொண்டு, கருதுவேன்-(இடைவிடாமல்) எண்ணுவேன்; (எ-று).

(விசேடவுரை) தற்பம்-இறுமாப்பு; அது அம் கடைக்குறைந்து தற்பு என நின்றது. அன்பு என்பது அர்பு என மெல்லொற்று வல்லொற்றாயது. வேலற்கு மூத்த திருக்கற்பகம் என்றதனால் விநாயகரைக் குறித்தது; உவமையாகுபெயருமாம்.

திருத்துங்க வந்தண ரோம்புநல் வேள்வித் திருமறைய
திருத்துங்க மானசிற் றம்பலம் பாடத் தமியனுளந்
திருத்துங் கருணைக் கடலே யடைக்கலங் கங்கைசிரத்
திருத்துங்கண் மூன்றுடைத் தேவ கயிலைப் பருப்பதனே.

(பதவுரை:) திருதுங்கம் அந்தணர்-ஞானச் செல்வமும் பரிசுத்தமுமுடைய பிராமணர்கள், ஓம்பும்-பாதுகாக்கும், நல் வேள்வி-நல்ல யாகத்தில், திருமறை அதிர்-அழகிய வேதங்களை முழக்குகின்ற, உத்துங்கமான-உயர்ச்சிபெற்ற, சிற்றம்பலம் பாட-ஞானவம்பலத்தைப் புகழ்ந்துபாட, கங்கை சிரத்து இருத்தும்-கங்காநதியைத் தலையில் வைத்தருளுப, கண் மூன்று உடைத்தேவே-சோம சூரி யாக்கினி என்னும் மூன்று கண்களையுடைய தேவனே! கயிலைப் பருப்பதனே-திருக்கைலாய மலையையுடையவனே! அடைக்கலம்-(உனக்கு அடியேன்) அடைக்கலப் பொருளாம்; (எ-று:) (1)

பருப்பதத் தாற்சிலை கோலிப் புரத்தைப் படுத்தவனும்
பருப்பதத் தார்திரைப் பூப்பிலம் புக்குப் பரந்தொளித்த
பருப்பதத் தாமரை சிற்றம் பலத்துப மன்னியனப்
பருப்பதத் தான்படப் பாயல்மன் காணப் பணிந்தனனே.

(பதவுரை:) பருப்பதத்தால்-மேருமலையை, சிலை கோலி-வில்லாகவளைத்து புரத்தை-திரிபுரத்தை, படுத்தவன்-அழித்தவனது, உம்பர் உப்பதத்து ஆர்-ஆர்ந்த விண்ணுலகம் வரைக்கும் பொருந்திய, திரை பூப்பிலம்-அலைகளையுடைய கடல் சூழ்ந்த பூமி கீழுள்ள பிலம் வரைக்கும் (பாதலம் வரைக்கும்) புக்கு-புகுந்து, பரந்து-பரவி ஒளித்த-(திருமாலுக்கு) மறைத்த, பருப்பதத் தாமரை-பருத்த திருவடித் தாமரையை, சிற்றம்பலத்து-திருச்சிற்றம்பலத்தில், உபமன்னியன்-உபமன்னிய முனிவன், அப்பருப்பதத்தான்-அருந்தப் பெருவாரவாய்ந்த குளிர்ந்த கையையுடைய பதஞ்சலி முனிவனும், படப்பாயல்மன்-ஆதிசேடனாகிய படுக்கையையுடைய திருமாலும், காண-காணும்படி, பணிந்தனன்-வணங்கினன்; (எ-று) (2)

பணியத்தன் பொன்னடிக் கெற்குக்கம் மீந்த பராபரன்பாம்
பணியத்தன் சத்தியைப் பெண்மை யதாகும் படியடியிற்
பணியத்த மேனியில் வைத்தசிற் றம்பல வாணனதிருப்
பணியத்தத் தன்பொடு செயயன்பர் மாறுெழும் பணபினரே.

(பதவுரை:) தன் பொன் அடிக்கு-தனது அழகிய திருவடியை, பணிய-வணங்க, எற்கு-எனக்கு, கம் ஈந்த பராபரன்-ஞானாகாசத்தைக் கொடுத்த மேலானவனும், பாப்பு அணி அத்தன்-பாம்பை ஆபரணமாக அணிந்த தலைவனும், சத்தியை-தனது சத்துவ குணமாகிய மாயையை, பெண்மையது ஆகும்படி-பெண் வடிவமாகும்படி, அடியில்-(உலகத் தோற்றத்திற்கு) முன்பே, பண்ணி-செய்து, அத்த மேனியில்-(தனது) திருமேனியின் அர்த்த பாகத்தில், வைத்த-வைத்தருளிய, சிற்றம்பலவாணன்-சிற்றம்பலவாணனுமாகிய சிவபெருமானது, திருப்பணி-திருத்தொண்டை, அத்தத்து-ஓர்நாளில், அன்பொடு-அன்புடனே, செய் அன்பர்-செய்கின்ற அன்பர்கள், மால் தொழும்-திருமால் வணங்கத்தகும், பண்பினர்-பண்பினையுடையவர்களாவர்; (எ-று.)

(விசேடவுரை:) அத்தம்-நாள், பெண்மையது என்புழி அது பகுதிப்பொருள் விகுதி...

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

3ம் பக்கத் தொடர்ச்சி

தங்கியிருந்தார். பின் திருமயிலைப்பூம்பதியிலுள்ள வணிகப் பிரபுவின் மகளாகிய பூம்பாவை பாம்பு கடித்திறந்த போது வணிகப் பிரபு அவ்வெலும்பையும் சாம்பலையும் ஒரு குடத்தில் சேமித்து வைத்திருந்தார், நாயனார் அதைத் திருக்கோயிலின்முன்கே கொண்டுவரச்செய்து "மட்டிட்ட புன்னை" என்னும் பதிகம் பாடிப் பூம்பாவையைத் தோற்றுவித்தார். இதனைக்கண்டோர் யாவரும் அதிசயித்தனர். திருமயிலாப்பூரை யகன்று திருவான்மியூர் திருக்கழுக்குன்றம் முதலிய தலங்களைத் தரிசித்துச் சென்று சிதம்பரத்தையடைந்து சிலநாள் அங்கு தங்கிப் பின் சீகாழிக்குச் சென்று தந்தை முதலியோர்களது வேண்டுகோளின்படி வைதிகநிலையை நிலைநிறுத்த விரும்பி நம்பியாண்டார் நம்பி என்பவரின் மகளை வேத விதிப்படி விவாகம் செய்து திருமணக்கோலம் காண வந்தோரெல்லோரும் சூழ அச்சோதியுட் புகச்செய்து நமச்சிவாயத் திருப்பதிகம் பாடிச் சோதியை வலஞ்செய்து வைகாசி மூலத்தன்று அதனுள்ளே புகுந்து மோட்சமடைந்தார். அப்போது இவருக்கு வயது பதினாறு. இவர் தம் மூன்றாம்வயசு முதல் பதினாறாம் வயசுவரையும் சிவஞானச் செல்வராய் விளங்கினர், இவர் பாடிய பதிகங்கள் பதினாயிரம். இப்போதுள்ளவை நூற்றுக்கு இவரது பாடல்பெற்ற தலங்கள் ௨௨0, நம் சுவாமிகளை ஆளுடைய பிள்ளை, பாலறு வாயர், பரசமய கோளரி, முத்தமிழ் விரகர் காழிவேந்தர், கவுணியர் தலைவர் எனவும் அழைப்பர். இவர் அருளிய தேவாரப் பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன.

இந்நாயனார்சரித்திரம் பதினோராந் திருமுறையிலும் பெரியபுராணத்திலும் அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளன. பிறவிப் பெருங்கடலை நீந்தி இறைவனடி சேர்தற்கு இவரது ஞானத் தமிழ் பிரவியெனும் தோற்றேணி போன்றது. இதனைப் பின்வரும் செய்யுள் விளக்கும்.

"பிறவியெனும் பொல்லாப்
பெருங்கடலை நீந்தத்
துறவியெனும் தோற்றோணி
கண்டீர்—நிறையுலகிற்
பொன்மாலை மார்பன்
புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்."

இச்சுவாமிகளின் திருவாக்கின் சிறப்பை விளக்குவது,

"புனலில் ஏடெதிர்
செல்லெனச் செல்லுமே
புத்தர் தலை
தத்தெனத் தத்துமே
கனலில் ஏடப்
பச்சென் றிருக்குமே
கதவு மாமறைக்
காட்டி லடைக்குமே
பனையில் ஆண்பனை
பெண்பனை யாகுமே
பழைய என்புபொற்
பாவைய தாகுமே
சின அராவிடந்
தீரெனத் தீருமே
சிறாதசம் பந்தர்
செந்தமிழ்ப் பாடலே.

என்பது.

"பண்டைவல் வினையினாற்
பயுமித் தழல்
குண்டரை வென்றுமுன்
கூடல் வைகியே
வெண்டிரு நீற்றொளி
விளங்கச் செய்திடும்
தண்டமிழ் விரகன்மெய்த்
தாள்கள் போற்றுவாம்"

"பரசமய கோளரியைப் பாலறுவாய
னைப்பும் பழனம் சூழ்ந்த
சிவபாதத் திருஞான சம்பந்தப்
பெருமானைத் தேய மெல்லாம்

## திருச்சி ரேடியோ

### சனி மே 25

காலை: 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 யாழ்ப்பாணம் எஸ் எஸ் துரை வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 என் வி ஞானகிராம பாகவதர் பாட்டு 8-30 சித்ரகானம் இசைத்தட்டு 9 முடிவு

1 யாழ்ப்பாணம் எஸ் எஸ் துரை வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 குரல்வகை இசைத்தட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கோமளம் ஸ்ரீனிவாஸ் பாட்டு 2-30 முடிவு.

மாலை: 5 கோமளம் சிறீனிவாஸ் பாட்டு 5-40 திருமந்திர விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6-15 என் வி ஞானகிராம பாகவதர் பாட்டு 6-30 எம் கே தியாகராஜ பாகவதர் இசைத்தட்டு 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7-15 திக்கற்றவருக்கு 7.30 தமிழில் செய்திகள் 7-45 எம் எஸ் சுப்புலட்சுமி பாட்டு 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை (ஆங்கிலம்) 9-45 எச் எஸ் மச்வாச்சார் கோட்டுவாத்தியம் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

### ஞாயிறு மே 26

காலை: 7.15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 திருக்கண்ணபுரம் எஸ் ஸ்ரீனிவாச பிள்ளை புல்லாங்குழல் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 எஸ் ஆர் கோவிந்தசாமி பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 8-30 இசைக்கதம்பம் 9 முடிவு.

12 கதையைக்கண்டுபிடியுங்கள் இசைத்தட்டு 12.30 ஒலிமலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 மாதர் பக்கம் 2 தமிழில் செய்திகள் 2-05 மூவலூர் எஸ் செல்லப்பா பாட்டு 2.30 முடிவு.

மாலை 5 திருக்கண்ணபுரம் எஸ் ஸ்ரீனிவாச பிள்ளை புல்லாங்குழல் 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6-15 மூவலூர் எஸ் செல்லப்பா பாட்டு 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7-15 சேவைக்கு வசதி 7 30 தமிழில் செய்திகள் 7-45 தேசமங்கலம் சுப்பிரமணியஐயர் வயலின் 9 ரேடியோ நாடகஇசை 9.10 அறிவிப்புகள் 9.15 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 டெல்லியில் உள்ளபடி 10.10 இசைவேளை 10.30 முடிவு.

### திங்கள் மே 27

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 பழனி ப்ரஹதீச்வரன் நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருநள்ளாறு இசைத்தொகுப்பு 8.30 டி டி சரஸ்வதி பாட்டு 9 முடிவு,

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி டி சரஸ்வதி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2.30 முடிவு.

மாலை: 5 பழனி ப்ரஹதீச்வரன் நாகஸ்வரம் 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6 15 சித்ரகானம் இசைத்தட்டு 6-45 கிராமநிகழ்ச்சிகள் 7 15 நகரவாழ்வு 7-20 தமிழில் செய்திகள் 7-45 செம்மை வைத்தியநாத பாகவதர் பாட்டு 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 சித்ரகானம் இசைத்தட்டு 10 திருச்சி வாத்ய கோஷடி 10 30 முடிவு.

### செவ்வாய் மே 28

காலை 7-15 கீதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7-30 கே ஏ ராதாகிருஷ்ண பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 சுத்தானந்தபாரதி பாடல்கள் இசைத்தட்டு 8.30 காஞ்சீபுரம் வி வி கிட்டப்பா பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 வி வி நாராயணன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைகல்வி 2-30 முடிவு,

மாலை 5 வி ஏ நாராரணன் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6-15 ஆர் பத்மநாபய்யர் புல்லாங்குழல் 6.30 என் எஸ் கிருஷ்ணன் கோஷ்டி 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7.15 முதலீடு பாதுகாப்பு 7-30 தமிழில் செய்திகள் 7-45 மாற்றுந்தாய் 8 ஆர் பத்மநாப ஐயர் நாகஸ்வரம் 8.45 கே ஏ ராதாகிருஷ்ண பிள்ளை பாட்டு 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 நவராகமாலிகை 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10-30 முடிவு.

---

குரவையிட்ட தமிழ்வேதம் விரித்தரு
ளுங் கவுணியர்தீங் குலதீபத்தை
விரவியெமை யாளுடைய வென்றிமழ
விளங்களிற்றைவிரும்பிவாழ்வாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல்

### இந்தியாவுக்கு ஜாவா அரிசி

இந்தனேஷியப் பிரதம மந்திரியான டக்ரர் ஜாரீர், இந்திய உணவுப் பஞ்சத்தைப் போக்குதற்காக 10 லட்சம் தொன் அரிசி உதவுவதாகப் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு வாக்குப்பண்ணியதும், ஜாவாவின் உள்நாட்டில் இருந்து அவ்வரிசியை வெளியே கொண்டு வருதற்கான ஏற்றுமதிச் சாதனங்களை பிரிட்டிஷார் உதவவேண்டும் எனக் கேட்டதும் ஏற்கனவே வெளிவந்த செய்திகளாகும்; இவ்விஷயத்தை ஆராய்ந்து ஏற்ற ஒழுங்குகளைச் செய்வதற்குப் பம்பாய் உணவு மந்திரியான ஸ்ரீ தினகரராவ் தேசாய் சிக்கிரத்தில் இந்தனேஷியாவுக்குச் செல்வார். இப்போது இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள தென்கிழக்கு ஆசியப் பிரதம சேனுதிபதியான மவுன்ற் பேற்றன் பிரபுவும், இவ்விஷயமாகச் சில தினங்களுக்குமுன் பண்டிதர் நேருவைச் சந்தித்துச் சம்பாஷித்தார் எனத் தெரியவருகிறது.

●

### பல சிக்கலான பிரச்சினைகள்

பிரிட்டிஷ் மந்திரிகள் வகுத்துள்ள அரசியற்றிட்டம், பொதுவாகப் பார்க்குமிடத்துச் சுதந்திரத்தைப் பாரத மக்களிடமே ஒப்படைப்பதாயினும், அதில் பல நூநமான தன்மைகள் இருப்பது இப்போது தெரியலாகும். முதலாவது மத்திய அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதாவென்று கருதப்படுகிறது பாதுகாப்பு, போக்குவரத்து, அயல்நாட்டு விவகாரம் என்னும் மூன்று விஷயங்கள் மாத்திரமே மத்திய அரசாங்கத்துக்கு இருக்கும். நாணயச் செலாவணி, ஏற்றுமதி, இறக்குமதி என்னும் இரு பிரதான விஷயங்களு மத்திய அரசாங்கத்துக்கு இல்லை. இரண்டாவது இந்திய மாகாணங்கள் மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்படும்: முதல் தொகுதியில் சென்னை, பம்பாய், ஒறிசா, பீகார், மத்திய மாகாணம், ஐக்கியமாகாணம் என்பன இருக்கும்; இரண்டாம் தொகுதியில், பாஞ்சாலம், சிந்து எல்லைப்புறம், பலுக்கிஸ்தானம் என்னும் மூன்றும் இருக்கும். மூன்ரும் தொகுதியில் அசாமும் வங்காளமும் இருக்கும்; இம் முத்தொகுதிகளில் பின் கூறப்பட்டன இரண்டும் முஸ்லீம்களைப் பெருவாரியாகக் கொண்டனவாகும்: ஆனல், அசாமின் ஜனத்தொகையில் ஹிந்துக்களே அதிகமாவர்; அப்படியான ஓர் மாகாணம் வங்காளத்துடன் சேர மறுக்கும். அப்படி மறுத்தால், இன்னேர் தொகுதியுடன் இம்மாகாணம் சேரமுடியுமா? அப்படிச் சேர்வதற்குச் சுதந்திரமில்லை இப்போது. மாகாணங்களை இப்படி அவற்றின் விருப்பத்தை அறியமுன் தொகுத்தமை பிழை என்று விஷயமறிந்தவர்கள் கூறுகின்றனர்.

●

### பிழைகளைத் திருத்தலாம்

மேலே காட்டிய நூநமான அம்சங்களை விளக்கி, மகாத்மாகாந்தி மந்திரிகளுக்கு எழுதியிருக்கின்ருர் எது எப்படியிருந்தபோதிலும், மந்திரிகள் வகுத்ததிட்டத்தைக்கையேற்றுநடாத்தவேண்டும்;காலகதியில்பிழையான அம்சங்கள் தாமாகவே அகன்றுவிடும் என்பதே அடிகளின் கருத்து. புதிய அரசியற் றிட்டதை சேர். தேஜபகதூர் சப்ரு ஸ்ரீ ஜெயக்கர் முதலாம் இராஜிய நிபுணர்கள் பாராட்டி அதனை வரவேற்றுப் பேசியிருக்கின்றனர்.

●

### உடனே சுதந்திரத்தைக் கொடு

அரசியல் நிர்மாணசபை கூடி, அதன்பின் சுதந்திர இந்தியாவுக்கான அரசியற்றிட்டம் வகுக்கும்வரை சுதந்திரம் தடைப்பட வேண்டியதில்லை. இப்போது அமைககப்படவிருக்கும் தற்காலிக அரசாங்கத்திடமே சகல அதிகாரங்களையும் ஒப்புவித்துவிட்டு, பிரிட்டிஷார் மூட்டை முடிச்சுகளுடனும், தமது சேனைகளுடனும் வெளியேறிவிடல் வேண்டும்" என்று காங்கிரஸ் தொழிற்கட்சித் தலைவரான ஸ்ரீஜத் ஜெயப்பிரகாஷ் நாராயன் கூறுகிருர்; இன்னும் சமீபகாலத்தில் சுதந்திரத்துக்காகக் கொடிய போராட்டம் ஒன்று ஆரம்பமாகலாம் என்றும், அதற்கு இந்திய மக்கள் அனைவரும் தயாராகவிருக்க வேண்டும் என்றும் கூறினர்.

●

### "சுதந்திரத்தை அடைந்துவிட்டோம்"

இன்று நாங்கள் சுயராச்சியத்தை அடைந்துவிட்டோம். எங்கள் அடிமைத்தளை நீங்கிவிட்டது. எம் வருங்கால சுபீட்சத்தைப் பாதுகாத்தல் இனி எம் கடமையாகும். இதுகாறும் பிரிட்டிஷார் எம்மை அடக்கியாள்வதற்காக அநுசரித்த உபாயங்கள் யாவும் அவலமாய்விட்டன. இனி, நாம் எமக்கிடையே இருக்கும் வேற்றுமைகளைக் களைந்தெறிந்து ஒற்றுமையுடன் மிளிர்வோமாக" என்று ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் சென்றவாரம் நிகழ்ந்த ஓர் கூட்டத்திற் கூறினர்.

●

### அரசியற் சிறையாளர் விடுதலை

பிரிட்டிஷ் அரசினரால் மாகாணந்தோறும் சிறையாக்கப்பட்டுள்ளவர்கள் இப்போது நூற்றுக்கணக்கில் காங்கிரஸ் மந்திரிகளால் விடுதலைசெய்யப்படுகின்றனர். பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள் திருப்பிக் கொடுக்கப்படுகின்றன. குலசேகரன் பட்டினத்திலே 1942ம் ஆண்டுக் கலகத்தின்போது சிறையாகி, மரணதண்டனை விதிக்கப்பட்டுப் பின் ஆயுட்கால தண்டனைபெற்ற சிறையாளரும் இப்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

---

# உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

அந்தநேரத்தில் என் அன்னை என்னைத் தேற்ற முயன்ருரெனினும் அவரால் தேற்ற இயலவில்லை; நான் அழுவதைக்கண்டு தாமும் அதிகமாக அழத் தலைப்பட்டார்: அம்மா, நீங்கள் கவலைப்படாமலிருங்கள், அழாதீர்கள், நானும் அப்படியேயிருக்கிறேனெனச் சொல்லி நானே என் தாயாரைத் தேற்ற நேர்ந்தது; என்மீது இரக்கங்கொண்டு ஒருவாறு தேறின என் மாதா என்னைப் பார்த்து "நான்பெற்ற மகளே, என்னையிட்டும் எனக்குக் கவலையில்லை, எங்களை விட்டுப்போன உன் அப்பரையிட்டும் எனக்குக் கவலையில்லை; நானும் போய்விட நீ தன்னந்தனியேயிருந்து எப்படி இந்தப் பொல்லாத உலகத்திலே காலங் கழிக்கப் போகிருயென்பதையிட்டுத்தான் கவலைப்படுகிறேன்" எனச் சொல்லி, என்னைத் தன் இரு கரங்களாலும் அணைத்துக்கொண்டு ஓ என்று கதறினுள்: இப்படிச் சொல்லக் கேட்ட நான் திடுக்கிட்டு அம்மா, நீங்கள் சொல்வது எனக்கொன்றும் விளங்கவில்லை; நீங்கள் என்ன என்னைத் தனிக்கவிட்டுத் தற்கொலை செய்யப் போகிறீர்களா? அப்படியே துணிந்து செய்யத் துணிந்தீர்களானல், நீங்கள் பெற்ற பிள்ளைதானே நானும், உங்களுக்கு முந்தியே உயிர் மாய்ப்பேன் என்றேன்; அப்படியொன்றுமில்லை, மகளே, தன்னுயிரைத் தான் விடுவது பொல்லாப் பாவமென்பது எனக்குத் தெரியும்; என் கவலைமேலீட்டினுற் சும்மா சொன்னேனென்று பெற்றவள் என்னை அந்தநேரம் ஒருவாறு தேற்றிவிட்டாள்; நானுந் தேறியிருந்தேன்; இரண்டு மூன்று நாட்செல்ல ஒரு இரவு நானும் ஆகாரஞ்செய்துவிட்டு என் தாயாரையும் உண்ணப்பண்ணியபின் இருவரும் வழக்கம்போல் ஒரே பாயிற்ருன் படுத்துக்கிடந்தோம்; என் தாயாரும் நானும் உறக்கம் வராமையாற் சாமம் வரையில் எங்களுக்கு நேர்ந்த பொல்லா விதியையிட்டுப் பேசிக் கவலைப்பட்டுக்கொண்டு கிடந்தோம்; தாயார் அதன்பின் பேசாமற் கிடப்பதை அவதானித்து, ஒருபோது கவலை மேலீட்டினுற் பேசாமற் கிடக்கிருரோ எனச் சந்தேகங் கொண்டு அம்மா, அம்மா என்று மெல்லக் கூப்பிட்டேன்; பதிலில்லை; தாயின் நித்திரையைக் குழப்ப வொண்ணுதென வெண்ணி நான் கண்மூடியபடி உறக்கமின்றிக் கிடந்தேன்; சற்று நேரஞ்செல்ல என் தாயார் "குறட்டை"யிட்டு நித்திரை செய்வதையவதானித்தேன்; அப்பொழுதும் எனக்கு உறக்கம் வந்திலது; பின்னருஞ் சற்றுநேரஞ் செல்ல "....நீங்கள் என்னைக் கோபித்தாலும் என் பிள்ளையைத் தனியே விட்டு உங்களோடு ஒருபோதும் வரமாட்டேன்......" என்று என்தாயார் "வாய்புலம்ப" நான் திடுக்கிட்டுப் பயந்தெழுந்து பாயிலிருந்துகொண்டு அம்மா! அம்மா! என்று தட்டியெழுப்பவே என் தாயாரும் தன் தேகம் பதற நா தடுமாற பாதி நித்திரையோடெழுந்திருந்து, "என்னடியம்மா, நான் ஏதோ வாய் புலம்பிவிட்டேனே? நீ பயப்படாதே" என்று சொல்லித் தன் இரு கைகளாலும் வாரி மார்போடணைத்தாள்; அப்படிச் செய்தபோதும் அன்னையின் பதைப்பு ஆறவில்லை; அம்மா உள்ளதைச் சொல்லுங்கள்; நீங்கள் ஏதுங் கனவு கண்டீர்களா? ஏதேதோவெல்லாம் புலம்பினீர்களே என்று நான் கலக்கத்துடன் கேட்க "ஒன்றுமில்லை, மகளே, பகலில் நினைப்பவைதான் இரவிலே கனவாகக் காண்பவை; என் கண்ணே, நீ அதையிட்டுக் கவலைப் படவேண்டாம்; பேசாமற் படுத்துறங்கு; எனக்கும் உறக்கம் வருகின்றது" என்று சொன்னர்; "அம்மா, நீங்கள் சொல்வது நிசந்தான்; ஆனுற் சற்று முந்திக் கண்ட கனவென்ன? எனக்கு அதை ஒளியாமற் சொல்லுங்கள் என்று அன்னையை இரந்தேன்" என்று இப்படி அந்தத் துறவியம்மாள் தன் பரிதாபமான வரலாற்றைச் சொல்லிக்கொண்டிருக்கும்போது, கேட்டுக்கொண்டிருந்தவர்களு ளொருவனுகிய இராமன்,

# விவாக விஞ்ஞாபனம்

### மாணிக்கவாசகர் — சாவித்திரிதேவி

புலோலி திரு. மூ. அ. பொன்னையா அவர்களின் புதல்வரும், பேராதனை விவசாயப் பகுதியில் உத்தியோகம் வகித்திருப்பவருமாகிய திரு. மாணிக்கவாசகரவர்களுக்கும், கோக்குவில் இந்துக்கல்லூரியிற் பல வருடங்களாகப் பிரதமாசிரியராகக் கடமை பார்த்து இப்பொழுது இளைப்பாறியிருக்கும் புலோலி திரு. மூ. கார்த்திகேசரவர்களின் கனிஷ்ட புதல்வி திருவளர் செல்வி. சாவித்திரிதேவிக்கும், நிகழும் வைகாசி மாதம் 18-ந் திகதி வெள்ளிக்கிழமையிரவு 1 மணி வரையில் வரும் சுபமுகூர்த்தத்தில், புலோலி மேற்கிலுள்ள "முருகவாசம்" என்னும் மணமகளில்லத்திற்ருனே விவாகம் நிறைவேற்றி வைக்கத் திருவருளை முன்னிட்டுப் பெரியோர்கள் நிச்சயித்திருத்தலால், அத்தருணம் சமுகஞ் செய்து மணமக்களை ஆசீர்வதித்துச் செல்லும் வண்ணம் அன்பர்களனைவரையும் தம்பதிகளின் பெற்ருர் கேட்டுக்கோள்ளுகின்றனர்.

Mis 60 24-5-46 — 28-5-46

### இலங்கையில் இந்தியர் வேலை நிறுத்தம்

உக்குசொடையில் உள்ள உருளிவெள்ளித் தோட்டத்தை இலங்கை அரசினர் வாங்கி, அதில் இலங்கைத் தொழிலாளரைக் குடியேற்ற நிச்சயித்துள்ளார்கள். அத்தோட்டத்தில் உள்ள 400 இந்தியத் தொழிலாளர் தாம் தோட்டத்தை விட்டுப் போவதில்லையென்றும்; அங்கு தாமே குடியேறவேண்டும் என்றும் வாதாடுகின்றனர் இலங்கை அரசாங்கத்தின் செய்கை மிகவும் அநீதியானது என்று இலங்கை இந்தியக் காங்கிரஸ் எடுத்துக்காட்டி, இலங்கை அரசாங்கத்தின் செயலைக் கண்டிப்பதற்காக, வருகிற ஜூன்மாசம் 4ந் திகதி இலங்கை முழுவதிலும் இந்தியர் வேலை நிறுத்தம் செய்வதென்றும், 12ம் திகதி களனிவலிப்பகுதியில் வேலைநிறுத்தம் செய்வதென்றும் தீர்மானித்திருக்கிறது

---

"ஆச்சி, உங்கள் பரிதாபமான வரலாறறைக் கேட்க எனக்கு அழுகை வருகிறது; பயமுண்டாகிறது; நான் போய்ப் படுத்து உறங்கவேண்டுமென்று சொல்லி அவ்விடத்தை விட்டு எழுதலும், விசுவநாதனும் இது பரிதாபமான கதை: இப்பொழுது படுக்கைக்குப் போவோம்; எஞ்சியதை நாளைக்குக் கேட்போம்" என்று சொல்ல, அங்கிருந்தோரனைவரும் கவலையோடு கூடியவர்களாய் மடத்துட் சென்று தத்தம் படுக்கையிற் படுத்துறங்கினர். (வரும்)


கோகிலகான இசைவாணி

**எம். எஸ். சுப்புலக்ஷ்மியின்**

கர்ணுமிர்த சங்கிதக்கச்சேரி

29-5-46 புதன்கிழமை இரவு 7 மணி தொடக்கம்

பரமேஸ்வரக்கல்லூரி மண்டபத்தில்

பிரவேசச்சீட்டு விபரம்:

ரூபா 20, 15, 10, 5.

நன்கொடையாளர்: ரூபா 250 போஷகர் ரூபா 100

**காணிவலும் களியாட்டவிழாவும்**

25-6-46 மீண்டும் ஆரம்பமாகிறது. முடிவு 29-5-46

29ந் திகதியன்று நிகழும் சங்கீதக் கச்சேரி காணிவல் மூன்றிலில் ஒலிபரப்பப்படும். காணிவல் முன்றிலுக்குப் பிரவேசம் அன்று மட்டும் ரூபா 1

(Mis 62 24) டெலிபோன் இல. 81


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கள்வர் குகை"

## அரசாங்கசபையில் அங்கத்தவர்கள் விவாதம் மிஸ்ரர் தகநாயகா வெளியேற உத்தரவு

"இச் சந்தர்ப்பத்தில் ஒன்றும் கூறேன்'
—மிஸ்ரர் தகநாயகா,

சென்ற செவ்வாய்க்கிழமை அரசாங்கசபைக் கூட்டம் நிகழ்ந்தது. சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி தலைமைவகித்தார். கொழும்புத் துறைமுகத் தொழிலாளரின் வேலை நிறுத்தத்தின்போது, கொட்டாஞ்சேனையில் நிகழ்ந்த ஓர் கூட்டத்தில் அரசாங்கசபையைப்பற்றி அச்சபையின் ஓர் அங்கத்தவரான மிஸ்ரர் தகநாயக்கா "கள்வரின் குகை" எனக் குறிப்பிட்டது அசசபையின் கௌரவத்துக்கும் அந்தஸ்துக்கும் பாதகம் விளைக்கத்தக்கதாகும். ஆகவே குறித்த அங்கத்தவர்மீது ஒழுங்கு நடைவடிக்கை எடுக்கவேண்டும் என்று பாணந்துறைப் பிரதிநிதியும் சபையின் உப தலைவருமான மிஸ்ரர் சுகந்தா டீ. பொன்சேக்கா சபைத் தலைவரை வேண்டினர்,

"இவ்விஷயமாக நீர்சொல்லவேண்டியது ஏதும் உண்டோ" என்று சபைத் தலைவர் மிஸ்ரர் தகநாயக்காவைக் கேட்டார். இவ்விஷயத்தை அற்ரேணி ஜெனரலின் அபிப்பிராயத்துக்கு விட்டிருக்கிறபடியால், இச் சமயத்தில் தாம் சொல்லவேண்டியது யாதும் இல்லை என மிஸ்ரர் தகநாயக்கா சாதித்தார்.

இந்த விஷயம் அரசாங்கசபையில் விவாதிக்கப்படவிருப்பதால், அந்தச் சமயத்தில் மிஸ்ரர் தகநாயக்கா சபையில் இருக்கவொண்ணாது என்று சட்டக் காரியதரிசி தலைவர்க்கு எடுத்துரைத்தார்.

தலைவர், மிஸ்ரர் தகநாயக்காவைச் சபையைவிட்டுப் போகும்படி கூற அவர் அதக்கிணங்கி வெளியே போனார்.

மிஸ்ரர் தகநாயகா போனபின், அரசாங்கசபை இவ்விஷயத்தை விவாதித்தது. மிஸ்ரர் தகநாயக்காவின் பேச்சை, அற்ரேணி ஜெனரலின் அபிப்பிராயத்துக்கு விடவேண்டும் என்ற தீர்மானம் பெரும்பாலானோரின் சம்மதத்தினுல் நிறைவேறியது.

தீர்மானம் நிறைவேறியதும் மிஸ்ரர் தகநாயகா சபையில் வர அனுமதிக்கப்பட்டார்.

## "இவை எல்லாம் வெறும் வெருட்டு"

அராபியர் நிலைபற்றி யூதர் அபிப்பிராயம்

பலஸ்தீனத்தில் யூதர் குடியேறுவதை ஆதரித்து பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் அறிக்கை விட்டதை அராபியர் ஆட்சேபித்தனர். அவர்கள் ருஷிய உதவியைநாடி பிரிட்டிஷாருடனும் அமெரிக்கருடனும் போர் தோடுக்கக்கூடும் என்பதெல்லாம் வெறும் வெருட்டன்றி உண்மையில் நடக்கக்கூடியதில்லையென்று யூத ஸ்தாபனத்தின் அதிகாரி ஒருவர் புள்ளி விபரங்களுடன் தெரிவிக்கிறர். அவர் மேலும் கூறுவதாவது: அராபியர் ஓர்போதும் ருஷிய உதவியை நாடமாட்டார்கள்; ருஷியா வந்தால் தங்கள் அதிகாரத்துக்கே ஆபத்து என்பதை அராபிய அரசர்கள் நன்கு உணருவர். அராபியர் உலகில் எல்லாமாக 84 ஆயிரம் ஆயுதப் படைகளுக்குமேல்இல்லை. ஆனல் பலஸ்தீனத்தில் மாத்திரம் யூதர் பூரண ஆயுதபாணிகளான 90 ஆயிரம் படைகளை வைத்திருக்கின்றனர். மத்திய கிழக்குப் பகுதியில் அராபியர்க்கு எவ்விதமான ஆயுதசாலையும் இல்லை. பிரிட்டிஷாரைவிட அவர்களுக்கு ஆயுத உதவி செய்ய வேறெவரும் இல்லை. ஆனல் தம் நலன்களுக்கே ஆபத்தைத் தேடும் அராபியர்க்குப் பிரிட்டிஷார் ஆயுதஉதவியளிப்பாரா,"

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர்

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலை மண்டபத்தில் 19.5 46 ஞாயிற்றுக்கிழமை நண்பகலில் ஷை நாயனுர் குருபூசை சிறப்பாக நடைபெற்றது. இரவு எழு மணி வரையில் ஸ்ரீமான் ஏ. பொன்னையா அவர்கள் தலைமையில் தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. தலைவரவர்களால் ஷை அடியார் சரிதம் மிகச் சிறப்பாக உபந்நியாசஞ் செய்யப்பெற்றது, பின்னர் ஸ்ரீமான் P. முத்தையா அவர்களால் 'பக்தியில் விளைந்த பலன்' என்னும் விஷயம் சம்பந்தமான சரித்திரம் கதாப்பிரசங்கமாக நிகழ்த்தப்பட்டது அதன்பின் தலைமையாசிரியர் குறிப்புரையும் நன்றியும் கூறக் கூட்டம் தேவாரபாராயணத்துடன் இனிது நிறைவேறியது. கடித.

## பகிரங்க அறிவித்தல்

ஐயன்மீர்!

எனது ஆட்சியும் சொந்தமுமான நீர்வேலி இறை வடுவாவுடை நெ. ப. 15 ஐ (கிழக்கு கதிர்காமர் கார்த்திகேசுவுக்கும், தெற்கு விதையா நிலமும், மேற்கு கதிர்காமர்கந்தையாவுக்கும், வடக்குசீனியர்கந்தையாவுக்கும் அம்மன் கோவிற்குமுரிய ஆதனங்களை எல்லையாகவுடைய ஆதனத்தைச்) சிலர் கள்ளச் சாதனம் செய்து வைத்திருப்பதாக அறிகிறேன். ஆதலின் இவ்வாதனத்தைப்பற்றிய சகல உரிமைகளும் எனக்கே உண்டென்பதைக் கற்பித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்
P. சின்னையா - நடராசா
நீர்வேலி தெற்கு. 20—5—46
Mis 51 - 24-5—23-6-46

## குத்தகைக்கு

முல்லைத்தீவிலிருந்து 7 கட்டை தூரத்திலுள்ள அலம்பிலில் ரோட்டுக்குப் பக்கத்தில் 50 ஏக்கர் விசாலமுள்ள தென்னந்தோட்டம் குத்தகைக்கிருக்கிறது. அநேக மரங்கள் காய்க்கின்றன. மற்றவை பாளை வருகின்றன. ஒட்டு மாமரங்களும் பலாக்களும் வேறு பயிர்களுமுண்டு வேறு விபரம் கீழ்க்கண்ட விலாசத்திடம் அறியலாம்

மு. இராமலிங்கம்
சச்சேரி. வதுளை 12-4 46
Mis 57 24 — 28 5-46

## குடைமுத்திரை (மார்க்) ஓடுகள்

நீங்கள் நவமாகக் கட்டியெழுப்பும் கட்டிடங்களுக்கு இன்றியமையாத

### கலிக்கற் ஓடுகள்

இவைகளின் கனம் மிகவும் குறைக்கப்பட்டு, வயிரம் மிகவும் கூட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவைகளினுல் வேயப்படும் கூரைகளுக்குப் பாரம் மிகக் குறைவாயிருக்கும். இவைகளின் கனத்துடன், இவைகளால்வேயப்பட்டிருக்கும் பரப்பை ஒத்துப்பார்த்தால் விசாலம் மிகவும் அதிகமாய்க் காணப்படும்.

காற்றினுல் உடையாது. மழையினுல் நீர் பொசியாது. மிகவும் கரிசனையாகவும், நுணுநுணுக்கமாகவும் செய்த ஆராய்ச்சியின் பயனுவே இவைகள் தயாரிக்கப்பட்டன.

ஓடுகள் வேண்டுமாயின் எவ்வளவு தேவையென்று எலவே 'ஏசண்டுகளுடன்' தாமதியாது பதிவுசெய்து வைப்பது நன்று. வருகிறவாரம் ஒருகப்பல் ஓடுகள் இறக்குமதி செய்வோம்,

'சோல் ஏஜென்ஸ்'
ஜே. செருபிம் அன் பிறதர்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.
Mis 243 B 12-3—12-6 (வெ)

# பொலிஸ் உத்தியோகத்தர்க்கு மலகூட வேலையா?

—(:—:)—

## பொலிஸ்விசாரணைச் சபைமுன்னர் சாட்சியம் ஐரோப்பிய அதிகாரியின் மிடுக்கு

### ஊரவர்களின் ஒழுக்கம் கெடுப்பவர் பொலிசாரா?

சென்றவாரம் பாணந்துறையில் பொலிஸ் விசாரணைச் சபை முன்னர் சாட்சியம் கூறிய காலிப் பொலிஸ் தானத்து விகிதர் மிஸ்ரர். G. D. S. ஹெகொட என்பவர் பொலிஸ் அதிகாரிகளின் நடவடிக்கைகளைக் கண்காணித்து வர அவர்களுக்கென ஓர் இரகசிய உளவுஸ்தாபனம் இருக்கவேண்டும் என்றும், இப்போது பொலிஸ் வேலைக்குத் தகுதியற்றவர் பலர் அதிகாரிகளாக இருக்கின்றனர் என்றும் கூறினர்.

பொலிஸ் பகுதியில் பிரதம விகிதராக இருந்து இளைப்பாறிய மிஸ்ரர் W. A. பைஸர் என்பவர் பொலிஸ் பகுதியில் நிகழும் ஊழல்களைப்பற்றிக் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது:—

"சில பொலிஸ் அதிகாரிகள் தம் கீழ்க் கடமை பார்ப்பவர் பலரைக் கேவலமாக நடாத்துகின்றனர். ஓர் ஐரோப்பிய பொலிஸ் அதிகாரி தம் கீழ்க் கடமைபார்த்த ஓர் பொலிஸ் உத்தியோகத்தரிடம், தனது "கக்கூஸ்", குப்பைக் கிடங்கு என்பவற்றை ஒழுங்குபடுத்தும் பொறுப்பை எற்கும்படி கூறினர். அந்த உத்தியோகத்தர் அப்படிச் செய்யமுடியாது என்று சொல்ல, "உனக்கு முன்பிருந்த உத்தியோகத்தர்கள் அப்படிச் செய்திருக்கிறர்கள்: உன்னல் செய்யமுடியாதா?' என்று கடிந்தார். அதற்கும் குறித்த உத்தியோகத்தர் அசையவில்லை; இதன்பின் இந்த உத்தியோகத்தருக்குச் சனிதிசைதான். அவரில் அனேக குற்றங்கள் காட்டித் தண்டிக்கப்பட்டார். இப்படி எல்லாம் செய்து கக்கூஸ் வேலை கற்பித்த ஐரோப்பிய அதிகாரி இப்போது பொலிஸ் உபதலைவராக இருக்கிறர். அவர் கட்டளையை மறுத்த உத்தியோகத்தர் இப்போதும் ஓர் சாதாரணப் பொலிஸ் பரிசோதகராகவே இருக்கிறர். பொலிஸ் உத்தியோகத்தர்தான் ஊரவர்களின் ஒழுக்கங்களைக் கெடுக்கின்றனர்.

## மகோத்ஸவம்

சுதுமலை சங்களைப்பதியி லெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ புவனேஸ்வரி யம்பாளுக்கு நிகழும் வைகாசிமாசம் 15ந் திகதி (28 5-46) செவ்வாய்க்கிழமை துவசாரோகணமும் (கொடியேற்றம்) 31 ந்திகதி (13-6-46) வியாழக்கிழமை ரதோத்ஸவமும் அடுத்தநாளாகிய வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு
Mis.25 23-4 46 to 22-3-47)

## தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

### சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா மூலிய செலவு வேறு:

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை,

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 27 26-4-46—25-10-46

## நவீன வேலைப்பாடுள்ள

பவுன் நகைகள், வெள்ளி நகைகள், வைர நகைகள், கல்நகைகளுக்கு நம்பிக்கைக்கும் நாணயத்துக்கும் சிறந்த இடம்

### கந்தையா பெரியதம்பி

நகை வியாபாரி, 509 காங்கேசந்துறை ரோட்
தட்டாதெரு யாழ்ப்பாணம்
Mis 196 7-1 — 7-7 (வெ)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோனமுறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday May, 24, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org